# அவன் ஆளுகை செய்பவனாக இருக்கிறான்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

**தேவன் ஒருபோதும் ஸ்திரீயை மூல சிருஷ்டிப்பில் வைக்கவேயில்லை**. அவள் மனிதனுடைய ஒரு உபசிருஷ்டியாக (by-product) இருக்கிறாள். **மனிதனும் ஸ்திரீயும் ஒன்றே.** ஒரு ஸ்திரீ, ஆதியிலே, அவர் ஆதாமிலிருந்து ஸ்திரீயை எடுத்தார். உண்மையில், மனிதனும் மனைவியும் ஒன்றே, ஆனால் அவர்களை மாம்சத்தில் வைக்க, அது மீண்டுமாக தங்களைத் தாங்களே பிரதி உற்பத்தி (reproduce) செய்தாக வேண்டியிருந்தது. ஆனால் அவர் மனிதனுடைய பெண்தன்மை கொண்ட பாகத்தை எடுத்து, அதிலிருந்து ஒரு ஸ்திரீயை உண்டாக்கினார்.

35. ஆகையால், **ஒரு ஸ்திரீ ஒரு மனிதனைப் போன்று நடந்து கொள் ளவோ, ஒரு மனிதனைப் போன்று உடை யுடுத்தவோ, ஒரு மனிதனைப் போன்று பேசவோ முயற்சிக்கும் போது, அவள் தன்னுடைய ஸ்தானத்துக்கு வெளியே இருக்கிறாள். ஒரு பெண் என்பவள் பெண்தன்மை கொண்டவளும்** (feminish), **இனிமையானவளும்,**

**அன்புள்ளவளுமாக இருக்கிறாள், அவள் ஒரு மனிதனைப் போன்று பெரியவளாகவோ, அவ்விதம் தொடர்ந்து போகவோ, அவனைப் போன்று நடந்து கொள்ளவோ மாட்டாள். நல்லது, அவள் அவ்வாறு இருக்கும்படி எதிர்பார்க்கப்படவில்லை. அவள் அவ்வாறு செய்யும்போது, அவளுடைய ஜீவியம் தாறுமாறான நிலையில் உள்ளது. அவள் இனிமையானவளும், அன்புள்ளவளும், இரக்கமுள்ளவளுமா யிருக்கிறாள்,** அங்கே ஆதாமோ அதிகமாக ஆணுக்குரிய பெரிய உறுதியுள்ள வகையின னாயிருக்கிறான், அவன் மனிதனாக இருந்தான், பெண்ணோ பெண்தன்மை கொண்டவளாயிருந் தாள், ஆனால் அது அதே ஆவியாகத்தான் இருக்கிறது, அவர் அவளை ஆதாமிடமிருந்து எடுத்தார்.

மேலும் கவனியுங்கள், ஒரு மனிதன் ஒரு மனைவியை ஏற்றுக்கொள்ளும் போது, அவன் இந்த மனைவியை தன்னுடைய மார்புக்குள்

எடுத்துக்கொள்கிறான் (நாம் இரு பாலரும் கலந்த கூட்டமாயிருக்கிறோம்.), **அவன் இந்த பெண்ணை தன்னுடைய இனிய இருதயமாக தன் மார்புக்கு கட்டி அணைத்துக் கொள்கிறான், அப்போது அவள் அவன் மேல் தன்னுடைய முத்திரையை வைத்து விடுகிறாள். அங்கே வேறொரு பெண் அதை என்றென்றுமாக கெடுத்துப் போடுகிறாள். அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள். வேறு எந்தப் பெண்ணும் அந்த அச்சை எந்தவித்திலும் பொருத்தக் கூடாது. நடனமாடும் இடங்களிலோ, அல்லது எவ்விடத்திலும் நீங்கள் உங்கள் கரங்களை ஒரு பெண்ணைச் சுற்றிலும் போட்டுக் கொள்ள, உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது.** அது சரியே. **உங்களுக்கு ஒரு மனைவி இருக்கிறாள், நீங்கள் அவளையே உங்கள் மார்போடு இழுத்துக்கொள்ளுங்கள்,** தேவன் அவளை உங்கள் இருதயத்தில் வைத்து, உங்களை அவள் மேல் முத்திரை போட்டு விட்டார், **அவள்**

**உன்னுடையவளாக இருக்கிறாள். நீ அவளுக்கு சொந்தமானவனாக இருக்கிறாய்.**

36. **பெண்ணே, நீ வேறொரு மனிதனை உன்னுடைய கரத்தில் எடுத்துக் கொண்டால், நீ எடுக்கப்பட்டிருந்த அந்த அச்சை (வார்ப்புருவை) நீ சிதைத்துப் போட்டிருக்கிறாய். அது ஞாபகம் இருக்கட்டும். நீ ஒரு மனிதனைப்போல நடந்து கொள்ளும்போது, நீ உன்னுடைய ஸ்தானத்திற்கு வெளியே இருக்கிறாய். மனிதனும் கூட பெண் தன்மை கொண்டவனாவதற்குத் துவங்கும் போதும், சிறு பிள்ளைத்தனமாக நடக்கத் துவங்கும் போதும், மேலும் இதையும், அதையும், மற்றதையும் செய்யத் துவங்கும் போதும், அவன் தன்னுடைய ஸ்தானத்திற்கு வெளியே இருக்கிறான்.** அவன் முதலாளியாக இருக்கிறான்; **அவன் ஆளுகை செய்பவனாக இருக்கிறான்.** இல்லை... இப்பொழுது, ஒரு மிதியடியாக (floor mat) இருப்பதாக நான் அர்த்தங்கொள்ளவில்லை; ஆளுகை செய்யும் ஒருவன் என்று நான் சற்று முன்பு கூறினேன்,

துணையாக இருப்பதையே (helpmate) அர்த்தப் படுத்துகிறேன். **பெண்களை திரும்பத்திரும்ப காலால் உதைக்க அல்ல,** அவர்கள்... அல்ல.

ஆனால் வேதாகமம் கூறுகிறது... தேவன் சிருஷ்டிப்பில், "நீ (அவன்) உன்னை ஆண்டு கொள்ளுவான்" என்று கூறியுள்ளார். **ஒரு முதலாளியாக இருப்பது அல்ல, ஆனால் ஒரு துணையாக, உங்களின் ஒரு பாகமாக இருப்பதற்குத் தான். அவள் இனிமை யாகவும், அன்பானவளாகவும், மென் மையாகவும் இருக்கிறாள்;** நீங்கள் அவ ளைச் சுற்றிலும் இனிமையாக வழிநடத்த வேண்டும், ஏனென்றால் அவள் உங்களின் ஒரு பாகமாக இருக்கிறாள். **நீங்கள் அவளைத் தவறாக நடத்தும்படிக்குப் போவீர்களானால், நீங்கள் உங்களைத்தானே தவறாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். மனரீதியாக சரியா யிருக்கும் ஒரு மனிதன் அவ்வாறு செய்ய மாட்டான்.** சரி.

*செய்தி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும், ஜுன் 19, 1958*